International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 02 April to June 2020 www.irjtsjournal.org

# பத்துப்பாட்டில் விருட்சங்கள் (மரங்கள்)

**மு.கயல்விழி,**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி,*
*காஞ்சிபுரம்-631502.*

முன்னுரை:

இயற்கை மனிதனுக்காகப் படைக்கப்பட்டது. எனவே அவற்றை மனிதனிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்கவியலாது. மனிதன் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ இயற்கையைச் சார்ந்து வாழ்கின்றான். பண்டைய மனிதரின் வாழ்வியலைக் கூர்ந்து நோக்கின் அவன் இயற்கையைக் கண்டு அஞ்சியதையும், பின்பு அவற்றை வழிபட்டதையும் காணலாம். இயற்கையின் பல்வகை வளங்களான மரம், செடி, கொடி, நதி, கடல், மலை, பூமி, சூரியன், சந்திரன் போன்றவற்றை அவன் தெய்வமாகத் தொழுதான். ஆனால் காலப்போக்கில் தன் நுண்ணறிவால் அவற்றையும் வென்று வாழ்ந்தான். அப்போது கூட அவனால் இயற்கையை விட்டுப் பிரிய இயலவில்லை. இயற்கையும் மனிதனும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கவியலாத பொருண்மைத் தன்மை வாய்ந்தன என்பதை உலக மனிதரின் வாழ்வியல் வரலாறு உணர்த்திற்று.

உலகில் முதன் முதலில் மனிதன் தோன்றிய இடங்களில் தமிழகமும் ஒன்று. பழம் கற்கால மனிதனின் சுவடுகள் இங்குக் கிடைத்தமை இதை நன்கு உணர்த்தும். அம்மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தாலும் அவை எவ்வாறு என்று அறியக் கூடவில்லை. சங்கக் காலத் தமிழருக்கு முந்தைய மனிதனின் வாழ்வியல் குறித்த சான்றுகள் போதிய அளவில் நமக்குக் கிடைக்காமையே இதற்குக் காரணமாம். ஆனால் சங்கக் கால மனிதனின் வாழ்வு குறித்த சான்றுகள் போதிய அளவு நமக்குக் கிடைத்து நமது நற்பேறாகும். சங்கத் தமிழர் எவ்வாறு இயற்கையை நேசித்து அவற்றுடன் ஒன்றி வாழ்ந்தனர் என்பதற்கு ஏராளமான இலக்கியச் சான்றுகள் உள.

நம் தமிழ் முன்னோர்கள் இயற்கையை உயிர் போன்று போற்றியதுடன் அவற்றை இலக்கியங்களில் பதிவு செய்துவிட்டும் சென்றுள்ளனர். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட இலக்கியங்களில் சிறப்பு வாய்ந்தது பத்துப்பாட்டு ஆகும். அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் இலக்கியப் பேழையாகும். இந்நூல் அக்கால இயற்கைச் சூழலைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இந்நூலின் மூலம் தமிழர் இயற்கையை நேசித்து வாழ்ந்த பாங்கு அறிய முடிகின்றது. மேல் நாடுகளில் இயற்கையைக் கண்டு அஞ்சி வாழ்ந்த காலகட்டத்தில் தமிழர் அவற்றை நேசித்து வாழ்ந்த போக்கு போற்றுதற்குரியது. இவ்வாறான இயற்கைப் பருப்பொருள்களில் விருட்சங்கள் (மரங்கள்) முதன்மை வாய்ந்தவை. ஐந்திணைகளில் பல்வகையான மரங்கள் வளர்ந்தன. அவற்றுள் பல இன்று காணப்படவில்லை. சில யாது என்றும்

உய்த்துணரப்படவில்லை. அவை பழந்தமிழர் வாழ்வுடன் பல்வகையில் பின்னிப் பிணைந்தவை. அவற்றை ஆராய்வதென்பது பழந்தமிழரின் இயற்கை வாழ்வியலை ஆராய்வதற்கு ஒப்பாகும். தமிழகத்தில் சங்கக் காலத்தில் காணப்பட்ட பல்வகை மரங்களைப் பத்துப்பாட்டு நூல் விரிவாகப் பேசுகின்றது. அவற்றை இங்கு நன்கு ஆராய்வோம்.

சண்பக மரம்

இதன் மலர் பெரிதாகவும், குளிர்ச்சி தருவதாகவும் காணப்பட்டது (திரு.முரு:27-28). மலைநாட்டு மக்கள் இம்மலரைத் தொடுத்து மாலையாக அணிந்து மகிழ்ந்தனர் (கு.பா:75).

சிந்துவாரம்

இது "கருநொச்சி மரம்" என்றும் அழைக்கப்பட்டது. இது சூடுவதற்கு வாசம்மிக்க மலரைக் கொண்டது (கு.பா:89.100-104).

சிறுமாரோடம்

இது "செங்கருங்காலி மரம்" என்று இக்காலத்தில் அழைக்கப்படும். பண்டைய தமிழர் இம்மரத்தைக் கொண்டு வீடுகளைக் கட்டினர். இதன் பூக்களை மலைநாட்டு மங்கையர் சூடி மகிழ்ந்தனர் (கு.பா:78.100-104).

அகில் மரம்

இது மணம்மிக்க மரமாகும். மிளகு விளையும் பகுதிகளில் இம்மரங்கள் அதிகம் காணப்பட்டன (திரு.முரு:296-297). இம்மரத்தின் கட்டைகளைக் காவிரி ஆறு அடித்துக் கொண்டு சென்றது (பொரு.ஆ.படை:238-40). இது வாசம் உள்ளது என்பதால் இதன் கட்டையைப் பொடியாக்கி நெருப்பிலிட்டு அதன் வாசத்தை மகளிர் தம் கூந்தலுக்குக் காட்டினர் (நெடு:55-56). அகில் மரம் சில சமயம் விறகாகவும் பயன்படுத்தப்பட்டது (சிறு.பா.படை:155-58). அகிலில் இருந்து நெய் எடுக்கப்பட்டு மகளிர் கூந்தலுக்குப் பூசப்பட்டது (கு.பா:93-100-104).

ஆசினி

இது ஒரு வகை பலா மரம் ஆகும். இது இனிய பழங்களைக் கொடுக்கக்கூடியது. இது சிறப்பாக மலைகளில் விளைந்தது. மலையருவிகள் இம்மரத்தின் பழங்களை அடித்துக்கொண்டு சென்றன (திரு.முரு:300-301). இது பலாச் சுளை போன்று வெடித்துத் தேன் சிந்தும் இயல்பினை உடையது (மலை.படு:138-39).

ஆல மரம்

இது மிகவும் பழமையான மரமாகும். இது பரந்து வளர்ந்தது. இவற்றின் கனிகள் அளவில் சிறியது (மலை.படு:268-269). ஆலமரங்கள் நிறைந்த பகுதி ஆலங்காடு என்று அழைக்கப்பட்டது (மதுரை:127).

இலவ மரம்

இது உயரமாக வளர்ந்த மரமாகும். இதன் கிளைகள் நீண்டன. இது நீண்ட தாளையும், பசுமையான காயையும் கொண்டிருந்தது (பெரும்.படை:83-85). இதன் காய் முதிர்ந்து வெடித்துப் பஞ்சு வெளிவந்தது. இது துவர்ப்பு சுவையுடன் காணப்பட்டது (பொரு.ஆ.படை:27).

ஈச்சை மரம்

இம்மரத்தை “ஈன்று” என்ற பெயரில் அழைத்தனர். இது கொழுவிய மடலை உடையது. இதன் இலைகள் நீண்டு கூர்மையாகக் காணப்பட்டது. ஏயினர்கள் இவற்றைக் கொண்டு தம் வீட்டுக் கூரைகளை வேய்த்தனர். இது அக்காலத்தில் பன்றியின் முதுகோடு இது ஒப்பிடப்பட்டது (பெரும்.படை:86-88). இவற்றை நெல்லிற்கும் களர் நிலத்தில் விளைந்த விதைக்கும் உவமையாகக் கூறப்பட்டது (பெரும்.படை:130-31).

ஏறுழ மரம்

இதன் மலர் நெருப்பினைப் போன்று சிவந்து காணப்பட்டது. இம்மரத்தின் மலரை மலை நாட்டு மக்கள் மாலையாக அணிந்து மகிழ்ந்தனர் (கு.பா:66.100-104).

ஓமை மரம்

இம்மரம் “பாங்கர்” என்ற பெயருடன் அழைக்கப்பட்டது (கு.பா:100-104). இது காட்டுப் பகுதியில் அதிகம் விளைந்தது. இதன் மலரையும் மலையாக அணிந்தனர்.

கமுக மரம்

இது பாக்கு மரம் என்றும் அழைக்கப்பட்டது. இது பசுமையான தாளினை உடையது. இதன் பூ என்பது அதன் பாளையே ஆகும் (பெரும்.படை:7-8). இதன் அடிப்பகுதி பெருத்துக் காணப்பட்டது (பெரும்.படை:363).இதன் கழுத்துப் பகுதி மெலிந்தும் நீலநிறத்துடனும் காணப்பட்டது. இதன் மேற்பகுதியிலிருந்து பாளைகள் தோன்றின. அவற்றினின்று பாக்கு குலைகள் வெளிப்பட்டது (நெடு.நல்:23-24). இதன் பெரிய அடிப்பகுதியை மது கொண்ட குப்பியுடன் ஒப்பிட்டனர் (பெரும்.படை:380-82).

கரந்தை

இது இனிய வாசனை உடைய மரமாகும். இப்பூக்கள் மாலையாக அணியக்கூடியது (கு.பா:76-100-104)

கருங்காலி மரம்

யாழ் செய்வதற்குக் கருங்காலி மரத்தைப் பயன்படுத்தினார். இம்மரம் பலவகையில் மனிதனுக்குப் பயன்பட்டது. அக்காலத்தில் இம்மரத்தை நன்கு சீவிக் காய்ச்சிக் களியாக்கிப் பாக்குடன் கலந்து நிறமேற்றியாகப் பயன்படுத்தினர் (மது.கா:100-101).

கற்பூர மரம்

இம்மரத்திலிருந்து உதிரும் பூக்கள் பளிங்கு நிறத்தில் காணப்பட்டது. இப்பூக்கள் வாசம் மிகுந்து காணப்பட்டது (மலை:56). இதற்கும் பூஜைக்குப் பயன்படும் கற்பூரத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இம்மரம் நன்னனுடைய செங்கண்மா மலையில் அதிகம் விளைந்தது.

காஞ்சி மரம்

இம்மரம் வளைந்து வளரக்கூடியது. எனவே இதை "முடக்காஞ்சி" என்று அழைத்தனர். இதன் அடிப்பகுதியும் கிளைகளும் சிறியன. இதன் மலர் நறுமணம் மிக்கது. இம்மரத்தை நாடி மயில்கள் வந்து தங்கின (பொரு.ஆ.படை:189-192). இதன் மேல் அமர்ந்து சிச்சிலி பறவைகள் இரைதேடின (சிறு.பா.படை:178-180). இம்மரத்தின் கொம்புகளைக் கொண்டு வலைஞர்கள் குடிசைகளை அமைத்தனர் (மலை:449). மலை நாட்டு மக்கள் காஞ்சிப்பூவை மாலையாகச் சூடி மகிழ்ந்தனர்.

காயா மரம்

இது முல்லை நிலத்தில் விளைந்தது. இதன் மலர்கள் நீலமணி போன்று பூத்தன (பொரு.ஆ.படை:201). கரிய அரும்பினை உடைய இம்மரத்தின் பூக்கள் மயிலின் கழுத்தினைப் போன்று காணப்பட்டது (சிறு.பா.படை:165). இம்மரம் மணற் பாங்கான இடத்தில் வளர்ந்தது. இதன் மலர்கள் அஞ்சனம் போன்றும் காணப்பட்டது. இதன் இலைகள் மிகவும் நெருக்கமானவை (முல்.பாட்டு:92-93).

குடசம்

இது பாலை நிலத்தில் வளரக்கூடிய மரமாகும். இது வெண்ணிறப் பூக்களை உடையது. அக்கால மலைநாட்டு மகளிர் இம்மலர்களை விருப்பத்துடன் சூடினர்.

குரவ மரம்

இம்மரம் குறிஞ்சிப் பகுதியில் விளைந்தது. இதன் மலர் அழகுடையது (கு.பா:67-100-104). இது பல இதழ்களைக் கொண்டது.

குமிழ் மரம்

இது முல்லை நிலத்தில் வளர்ந்த மரமாகும். இதன் பழம் துவராடை நிறமுடையது (சிறு.பா.படை:225-226). இம்மரத்தின் கட்டையைக் கொண்டு "வில்யாழ்" என்ற இசைக்கருவியை உருவாக்கினர் (பெரும்.படை:180-182). இது தவிர யாழின் "பந்தர்" என்ற இசைக்கருவியின் உறுப்பும் இம்மரத்தினின்றே உருவாக்கப் பட்டது (பொரு.ஆ.படை:21-22).

குருத்த மரம்

இது பெரிய கரிய நிறமுடைய பூக்களை உடைய மரமாகும். இம்மலர்களை மாலையாக்கி மங்கையர் அணிந்து மகிழ்ந்தனர் (கு.பா:95-100-104).

கூவிரம்

இது மலையில் விளைந்த மரமாகும். இதன் பூக்கள் மாலையாக அணியப்பட்டது.

கூவிள மரம்

இம்மரத்தின் இலைகளை மாலையாக்கித் தெய்வத்திற்குச் சார்த்துவர். இக்காலத்தில் இம்மரம் "வில்வமரம்" என்ற பெயருடன் அழைக்கப்படுகின்றது.

கொன்றை மரம்

இம்மரம் முல்லை நிலத்தில் வளர்ந்தது. இதன் பூக்கள் பொன்னிறமானவை (பெரும்.படை:201). இது கொத்துக் கொத்தாயும், ஒளி கொண்டனவையாகவும் பூத்தன (முல்.பாட்டு:94). யாழினுடைய உறுப்பான கோட்டினைக் கொன்றை மரத்தால் செய்தனர் (பொரு.ஆ.படை:21-22).

கொங்கை மரம்

இம்மரத்தின் அரும்புகள் பெண்டிரின் இளநகிலைப் போன்று காணப்பட்டன. (திரு.முரு:34-35). இது விரிந்த இதழுடையதாகப் பூத்தது (கு.பா:73-100-104). நதிகளில் கொங்கின் பூக்கள் அடித்து வரப்பட்டதை இலக்கியங்கள் வழி அறியலாம். (மது.கா:338-40).

கோளி மரம்

இம்மரம் பூக்காமல் காய்த்த மரவகையாகும். இது பலா மற்றும் ஆல மரத்தின் இனத்தைச் சார்ந்த மரமாகும்.

சந்தன மரம்

இது புகழ் பெற்ற மரமாகும். இது மிகுந்த மணமுடையது. இதைப் பொடிகளாக்கியும், குழம்பாக்கியும் பெண்டிர் பூசி மகிழ்ந்தனர் (நெடு.நல்:51-52). சூரா மகளிர் சந்தனத்தை மார்பில் பூசி

மகிழ்ந்தனர் (திரு.முரு:32-35). போருக்குச் செல்லும் வீரர்கள் மார்பிலும் சந்தனக் குழம்பு காணப்பட்டது. சந்தனப் பூவையும் மகளிர் மாலையாகச் சூடிமகிழ்ந்தனர் (கு.பா:93-103-104). சந்தனக் கட்டைகள் அருவிகளில் அடித்துச் செல்லப்பட்டன. அக்காலத்தில் கோட்டை அகழிகளில் தேங்கும் நீரின் துர்நாற்றத்தைப் போக்கச் சந்தனக்கட்டைகள் இடப்பட்டன(சிறு.பா.படை:116-119).அக்காலத்தில் சந்தன மரப்பொடிகள் பலசரக்கு கடைகளில் விற்கப்பட்டன (மது.கா:493). அரசர்களும், வேதியர்களும் சந்தனத்தை மார்பில் சூடி மகிழ்ந்தனர்.

சுரபுன்னை

இது குறிஞ்சிப் பகுதியில் விளைந்த மரமாகும். சில நேரம் இது நெய்தல் நிலத்திலும் வளர்ந்தன. இதன் மலர்கள் வாசம் உடையவை. இது நாகத்தை ஒத்து காணப்பட்டன (திரு.முரு:301-302). இது தேன் அதிகம் உடைய மலர்களைக் கொண்டிருந்தது. (சிறு.பா.படை:107-109). இதன் பூக்கள் நெருங்கியும் மகரந்தப் பொடி நிறைந்தும் காணப்பட்டன. நன்னன் மற்றும் பாரியின் மலைப்பகுதிகளில் இம்மரங்கள் மிகுந்து வளர்ந்தன (மலை.படு:81). இம்மரத்தின் மாலையை மலைநாட்டு மங்கையர் சூடி மகிழ்ந்தனர்.

செங்கடம்ப மரம்

இம்மரம் பெரிய அடியினை உடையதாகத் திகழ்ந்தது. இதன் மலர் தேரின் உருளை போன்று காணப்பட்டது. குறிஞ்சி நிலமக்கள் இம்மாலையை முருகப் பெருமானுக்குச் சூடி வழிபட்டனர் (திரு.முரு:10-11).

செருந்தி

இம்மரத்தின் மலர்கள் பொன் நிறத்தில் காணப்பட்டன (சிறு.பா.படை:147). இது இளவேனில் காலத்தில் பூத்தன.

சேடல்

இது வாசமுடைய மலராகத் திகழ்ந்தது (கு.பா:82-100-104). இதைப் “மரமல்லிகை” என்று இன்று அழைப்பர். இதை “பவழமல்லி” என்றும் வேறு பெயரிட்டு அழைப்பர்.

ஞாழல் மரம்

இது மருத நிலத்தில் வளர்ந்தது. இது தாழ்ந்த சோலைகளைக் கொண்டு காணப்பட்டது (பொரு.ஆ.படை:197).

தணக்க மரம்

இது அடர்ந்த காடுகளில் விளையக்கூடிய மரமாகும். இதன் கட்டையைக் கொண்டு "யாழ்" என்ற இசைக்கருவி செய்தனர் (பொரு.ஆ.படை:21-22). இதை "முட்டைக் கொங்கு" என்றும் அழைப்பர்.

தில்லை

இம்மரம் மலைகளில் அதிகம் விளைந்தது (கு.பா:77-100-104).

நரத்த மரம்

இம்மரத்தை இன்று "நாரத்தை" என்று அழைக்கின்றனர். சங்க இலக்கியங்கள் இம்மரத்தை "நரத்தம்", "நாரத்தம்" என்று அழைத்தன. இதன் கனிகள் புளிப்புச் சுவையுடையவை. இதன் மலர்கள் சூடுவதற்கு உரியன (கு.பா:94-100-104).

நாக மரம்

இது சுவையான கனிகள் கொண்டு திகழ்ந்த மரமாகும். இதன் கனிகள் கருஞ்சிவப்பு உடையவை. இது மருத நிலத்தில் அதிகம் விளைந்தன.

நாவல் மரம்

இது இனிய பழங்கள் கொண்ட மரமாகக் காணப்பட்டது. இதன் பழங்கள் கருநிறமுடையது (திரு.முரு:18). இது சுவை மிகுந்தது. காற்றில் உதிரக்கூடிய கனிகளைக் கொண்டது (மலை படு:135)

நுணவ மரம்

இது குறுகி வளரக்கூடிய மர இனத்தைச் சார்ந்தது. இதை இன்று "நுணா மரம்" என்று அழைக்கின்றனர். இதன் மலர்கள் வெண்ணிறத்தில் தேன் சுமந்து நின்றன (சிறு.பா.படை:51-52).

தெங்கு

இது இன்று தென்னை மரம் என்று அழைக்கப்படுகிறது. இதன் குலை "தெங்கின் குலை" என்று அழைக்கப்பட்டது (பொரு.ஆ.படை:208). தென்னை ஓலை "கோடு" என்றும் பழுத்த ஓலை "மடல்" என்றும் அழைக்கப்பட்டது. இதன் இளநீர் "தாழ இளநீர்" என்றும் அழைக்கப்பட்டது (திரு.முரு:307-308). இது "தாழை குழவி தீநீர்" என்றும் அழைக்கப்பட்டது. (பெரும்.படை:357). இதன் காய்கள் நன்கு புடைப்புடன் காணப்பட்டன. இம்மரத்தின் மேலோடு யானையின் உடலினை ஒத்து காணப்பட்டதாக இலக்கியங்கள் செப்பும் (பொரு.ஆ.படை:351-355). தெங்கு மரத்தோப்பில் அக்காலத்தில் பல குடியிருப்புகள் கட்டப்பட்டிருந்தன.

நெட்டி மரம்

இம்மரம் “கிடையெச்சை” என்று அழைக்கப்பட்டது. அக்கால மக்கள் இம்மரத்தின் பூக்களை மாலையாகத் தொடுத்து உப்பு வண்டி இழுத்த எருதுகளுக்கு அணிவித்து மகிழ்ந்தனர் (சிறு.பா.படை:54).

நொச்சி மரம்

இம்மரம் நெய்தல் நிலத்தில் விளைந்தது. வீடுகளைச் சூழ்ந்து இம்மரம் நன்கு வளர்ந்தது. இதன் அடியில் ஆமைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொறித்தன (பொரு.ஆ.படை:184-186).

நொய் மரம்

இது “நொய்ய மரம்” என்றும் அழைக்கப்பட்டது. இது விறகுக்குப் பயன்படுத்தப்பட்டது. இது மலைப்பகுதியில் அதிகம் விளைந்தது (நெடு. நல்:446-447)

பயினி மரம்

இதுவும் மலைப்பகுதியில் விளைந்த மரமாகும். இதன் மலரை மாலையாகச் சூடிப் பெண்டிர் மகிழ்ந்தனர் (கு.பா:69-100-104).

பலா மரம்

தமிழரின் முக்கனிகளில் ஒன்றான இம்மரம் மிகவும் புகழ்பெற்ற ஒன்றாகும். இதன் சுளைகள் இனிய சுவை கொண்டன (பெரும்.படை:408). இப்பழத்தின் விதைகளைக் கன்றுகளுக்கு அளித்து மகிழ்ந்தனர் (மலை படு:336-339). அக்காலத்தில் மயில்களும் பலாச் சுளையைத் தின்று மகிழ்ந்தன (பொரு.ஆ.படை:190-192). தோப்புகளில் பலா மரங்கள் நன்கு செழித்து வளர்ந்தன. தமிழர் விருந்தினருக்குத் தேனும், பலாச் சுளையையும் உணவாகப் படைத்து மகிழ்ந்தனர் (மது.கா:189-190). மலை நாட்டில் பலா விதைகளை உணவாகச் சமைத்து உண்டனர் (மலை படு:174-181). முசுக்கலைகள் பலாச் சுளையைத் தோண்டித் தின்றன.

பலாச மரம்

இது தேக்கு வகையைச் சார்ந்த மரமாகும். இதன் பூ சூடுவதற்கு உரியதாகும் (கு.பா:88-100-104).

பனை மரம்

இது வறண்ட இடத்தில் வளர்ந்தது. இது கருமை நிறம் கொண்டது. இது புல் வகையைச் சார்ந்த மரமாகும். இம்மரத்தைக் கரடியின் உடலுடன் ஒப்பிடு மகிழ்ந்தனர் (திரு.முரு:311-314). இதன் உட்பகுதி வெற்றிடமானது. பனையில் செரும்புகள் மிகுந்து காணப்பட்டன. இதன் நுங்கு உண்பதற்குச் சுவை மிகுந்தது (சிறு.பா.படை:26-28). இதன் அடிப்பகுதி திரண்டு பருத்துக் காணப்பட்டது. பனையின் பூ மாலையைச் சேர மன்னர்கள் அணிந்தனர் (பொரு.ஆ.படை:143-144).

அன்றில் பறவைகள் பனை மடலில் தங்கின. இது தவிர நாரைகளும் இம் மரத்தில் தங்கி வாழ்ந்தன. இம்மரத்தில் துக்கணங் குருவிகள் கூடுகட்டி வாழ்ந்தன (ப.பாலை:74)

பாதிரி மரம்

இம்மரம் பெரிய இதழ்களைக் கொண்டதாகத் திகழ்ந்தது. இது தேன் நிறைந்தது என்பதால் எப்போதும் வண்டுகள் மொய்த்துக் கொண்டிருந்தன (பெரும்.படை:5-6).

பாலை மரம்

இது காட்டில் விளைந்த மரமாகும்.

பிண்டி மரம்

இது “அசோக மரம்” என்று அழைக்கப்படுகிறது. சமணர்களால் போற்றுதற்கு உரிய மரம் இது திகழ்ந்தது. இதன் தளிரைச் சூராமகளிர் தம் காதுகளில் சூடி மகிழ்ந்தனர் (திரு.முரு:30-32).

புன்க மரம்

இம்மரம் மருத நிலத்தில் விளைந்தது. இதைப் “புன்கு” என்றும் அழைத்தனர் (பொரு.ஆ.படை:196).

புன்னாக மரம்

இது புன்னை மரவகையைச் சார்ந்த மரமாகும்.

புன்னை மரம்

இம்மரம் நெடிய தாளினை உடையது. இதனுடைய அரும்புகள் முத்துகள் போன்று காணப்பட்டன (சிறு.பா.படை:149).இதன் மலர் மிகப்பெரியது. இவை நெய்தல் நிலத்தில் சிறப்பாக வளர்ந்தன. இது வளைந்த கால்களை உடையது என்பதால் இதைக் கொண்டு பந்தல்கள் அமைத்தனர் (பெரும்.படை:226-267). நாரைகள் புன்னை மரத்தில் வந்து தங்கின (பொரு.ஆ.படை:203-204).

மஞ்சாடி மரம்

இது காட்டு வகையைச் சார்ந்த மரமாகும். இம்மரத்தின் மலரைத் ‘திலகம்” என்றும் அழைத்தனர். இதனை மாலையாகச் சூடியும் மகிழ்ந்தனர் (கு.பா:74-100-104).

மரா மரம்

இம்மரம் வெண்மையான பூக்களை அளித்தன. இது சிறப்பாகக் குறிஞ்சி நிலத்தில் வளர்ந்தது. மலைநாட்டு மகளிர் கூந்தல்களை இம்மலர்கள் அலங்கரித்தன (திரு.முரு:202-203). இது ‘வெண்கடம்ப மரம்” என்றும் அழைத்தனர். இது தவிரச் “சுள்ளி” என்றும் இது அழைக்கப்பட்டது. இதன் மலர் சிவந்த நெருப்பு நிறம் உடையது (சிறு.பா.படை:498-500). இம்மரம் செழித்த நிழலை

உடையது. இம்மரத்தின் மற்றொரு வகை "செங்கடம்பு மரம்" என்று அழைத்தனர். அது பெரிய அடியையும் பெரிய இலையையும் உடையது (திரு.முரு:10).

மருத மரம்

இது மருத நிலத்தில் சிறப்பாக வளர்ந்தது. இது கரிய பூவிதழைக் கொண்டது (திரு.முரு:27-28). இதன் மலர் மணம் உள்ளது. மருதப் பூவையும், சந்தனத்தையும் அக்காலப் பெண்கள் மார்பில் பூசி மகிழ்ந்தனர். இதன் கொம்புகள் மிகவும் உயரமானவை. இம்மரங்களில் பாம்புகள் விரும்பி வாழ்ந்தன. அக்காலத்தில் இம்மரத்தின் நிழலில் வைக்கோல் போர்களை அமைத்திருந்தனர் (பெரும்.படை:232-238).

மாமரம்

சுவையான முக்கனிகளில் ஒன்றான மரம் இது. மகளிரை மாந்தளிருடன் ஒப்பிட்டு இலக்கியங்கள் பாராட்டும். இம்மரத்தின் பூவினைப் பெண்களின் அழகுடன் ஒப்பிடுவர் (மது.கா:706-707). மகளிரின் நிறத்தினை மாந்தளிருடன் ஒப்பிட்டுப் பேசினர். இவற்றின் கனிகள் மிகுந்த சுவை தரக்கூடியன (மலை படு:512-513). மாங்கனியில் இருந்து சாறு அக்காலத்தில் பிழிந்தெடுக்கப்பட்டது.

முருக்க மரம்

இது "முரங்க மரம்" என்று அழைக்கப்பட்டது. இதன் கொம்புகள் நீண்டவை. இதன் மலர்கள் அதிகம் செறிந்து காணப்பட்டது. இம்மரம் மென்மையானவை. இம்மலரில் தேன் செறிந்து காணப்படும் (சிறு.பா.படை:244-245). யாழின் பந்தரை இம் மரத்தில் இருந்து உருவாக்கினர் (பொரு.ஆ.படை:21-22).

மூங்கில்

இது புதர்களாய் வளர்ந்தது. இம்மரம் மலைப்பகுதியில் செழித்து வளர்ந்தன. இதை வேய், காம்பு, பனை, கழை என்ற பெயரிலெல்லாம் அழைத்தனர் (திரு.முரு:12). மூங்கில் நெல்லை இடித்து அவலாக அக்கால மக்கள் உண்டனர் (மலை படு:121). மூங்கில் அரிசியைக் கொண்டு மதுவை உருவாக்கினர். இதன் பட்டையைக் கொண்டு மெல்லிய ஆடை நெய்தனர் (சிறு.பா.படை:235-236). இம்மூங்கிலைக் கொண்டு கள்ளைப் புளிக்கச் செய்தனர் (மலை படு:171-172). முல்லை நில மக்கள் இதனுள் தயிரைத் தோயச் செய்தனர். யானைகள் மூங்கில் நெல்லை விரும்பி உண்ணும் (கு.பா:35). மூங்கில் மரம் மனிதனுக்குப் பல வகையில் பயன் தந்தது (பெரும்.படை:284-287).

யாமரம்

இது மூங்கில் இனத்தைச் சார்ந்த மரமாகும். இது மென்மையான தளிரைக் கொண்டது. இதனை "யா" என்றும் அழைத்தனர். இதன் தளிரை யானைகள் விரும்பி உண்டன (மலை.படு:729).

வகுள மரம்

இதைப் "மகிழ மரம்" என்றும் அழைத்தனர். இது மிகுந்த வாசனை உடையது. இதன் மாலையை பெண்கள் சூடி மகிழ்ந்தனர் (கு.பா:70.100-104).

வடவனம்

இது மலையில் வளர்ந்த மரமாகும்.

வாகை மரம்

இது மலையில் விளையக்கூடிய மரமாகும். போரில் வெற்றி பெற்றவர்கள் இதன் மாலையைச் சூடுதல் வழக்கம். பெண்கள் இம் மலர்களை மாலையாக்கிச் சூடினர் (கு.பா:67.100-104). அகத்தி மரமும் "புகழா வாழை" என்றே அழைக்கப்பட்டது. இதன் பூ வளைந்தது என்பதால் இக்காலத்தில் இது பன்றியின் கொம்புக்கு உதாரணம் கூறப்பட்டது (பெரும்.படை:109-110).

வாழை மரம்

இது முக்கனிகளில் சிறப்பான கனி தரும் மரமாகும். இது "வாழைக் குலை" என்று அழைக்கப்பட்டது (பொரு.ஆ.படை:208). மகளிரின் கூந்தலை வாழைப்பூவுடன் ஒப்பிட்டுக் கூறினர் (சிறு.பா.படை:21-22). இப்பூவின் இதழால் தழை புடை செய்தனர். நாடு முழுவதும் வாழைத் தோப்புகள் காணப்பட்டன (மலை படு:131). இதன் குலைகள் கணத்து நிலத்தை நோக்கிச் சாய்ந்து காணப்பட்டன (பெரும்.படை:359). அவை முற்றிக் கனியாகப் பழுத்தன.

வானி

இது மலையில் வளரக்கூடிய மரமாகும்,

விடத்தே தொடரி

இது முள் வகையைச் சார்ந்த மரமாகும். இது பெரும்பாலும் குறுங்காடுகளில் வளர்ந்தன. "விடத்தேர்" என்றும் "விடத்தேரை" என்றும் இதை அழைத்தனர் (பெரும்.படை:184-185).

விள மரம்

இது பாலை நிலத்தில் வளரக்கூடிய மரமாகும். வேட்டுவர்கள் இம்மரங்களை அதிகம் வளர்த்தனர் (பெரும்.படை:95-96).

வெட்சி

ஆநிரைகளைக் கவரும் போது இப்பூக்களை மாலையாக்கிச் சூடினர். வேலன் வெறியாடும் போது வெட்சி மாலை சூடியிருந்தான் (திரு.முரு:208). இதன் பூக்கள் சிவந்து காணப்பட்டன.

வேங்கை மரம்

இதன் இலைகள் கருநிறம் உடையன. இதன் அடி பருத்தும், கொம்புகள் சிறுத்தும் காணப்பட்டன. இதன் நறுமணம் மிக்க மலர்களை மலைநாட்டு பெண்கள் “புலி” “புலி” என்று கூவிப் பறித்தனர் (மது.கா:296-297). வேங்கை பூவின் தாதுவினைச் சந்தனத்துடன் குழைத்துப் பெண்கள் மார்பில் பூசி மகிழ்ந்தனர். இதன் மலர்கள் கொத்துக் கொத்தாகப் பொன் போன்று பூத்துக் குலுங்கின (மலை.படு:305-306). இதன் பூ அவரை விதை போன்று காணப்பட்டன (பெரும்.படை:194-195). இதன் மலர்கள் மிகுந்த தேன் உடையவை என்பதால் வண்டுகள் எப்போதும் மொய்த்திருக்கும் (சிறு.பா.படை:22-24).

வேப்ப மரம்

இதனை “வேம்பு” என்றும் அழைத்தனர். இப்பூவைப் பாண்டிய மன்னர்கள் மாலையாக அணிந்தனர் (பொரு.ஆ.படை:143-144).இதன் கொம்புகள் வலிமையானவை, ஆனால் காய்களோ சிறியவை. இது மிகுந்த மருத்துவக் குணமுடையது என்பதால் அக்காலத்தில் குழந்தைகளுக்குக் காவலாக இதை வைத்தனர் (பெரும்.படை:59).

வேரல்

இது மூங்கில் வகையைச் சார்ந்த மரமாகும் (திரு.முரு:297). இது பின்னிப் பிணைந்த கோல்களை உடையதாகத் திகழ்ந்தது (மலை படு:223). இதன் மலர்களை மகளிர் மாலையாகச் சூடி மகிழ்ந்தனர்.

முடிவுரை:

மண்ணும், மரமும் மனிதனின்று பிரிக்க இயலாதவை. அவற்றைப் பல வகையில் பயன்படுத்திய அறிவு சார்ந்த நம் முன்னோர்கள் அவற்றை நன்றியுடன் நினைவு கூர்ந்து, அவர்கள் படைத்த இலக்கியங்களில் அவற்றைப் பதிவு செய்து விட்டுச் சென்றனர். இவ்வாறு அவர்கள் இயற்கையைப் பல்லாற்றானும் போற்றியதற்குச் சாலச்சிறந்த சான்றாகச் சங்கக் கால விருட்சங்கள் திகழ்ந்தன. இயற்கையின் சிறப்பான படைப்புகளாக விருட்சங்கள் விளங்கின. அவை அவர்களுக்குப் பல வகையில் பயன் தந்து சிறந்த புகலிடங்களாகவும் திகழ்ந்தன. மேலும் அவை மனிதனுக்கு இளைப்பாற நிழலையும், சுவைக்கக் கனிகளையும், சமைக்கக் காய்களையும், சூடுவதற்கு மலர்களையும், எரிப்பதற்கு விறகுகளையும், வீடு கட்டக் கட்டுமானப் பொருள்களையும் தந்தன. அவன் வாழ்வதற்கு அவை பல வகையில் உதவிப் புரிந்தன.

சங்க இலக்கியங்களில் சிறப்பான பத்துப்பாட்டு பல்வகையான விருட்சங்களை அழகாகப் பதிவு செய்துவிட்டுச் சென்றுள்ளது. இந்நூலில் சுட்டப்படும் விருட்சங்கள் பல இன்று காணக் கிடைக்க வில்லை. இதில் காணக்கிடக்கும் மரங்கள் யாவை என்பது கூட இந்தத் தலைமுறை அறியாது அல்லது அறிய முயலாதது மிகுந்த வேதனைக்குரியதாகும். அன்று போல் இம்மரங்களைப் போற்றிய உயரிய மனிதர்கள் இன்று ஒருவரேனும் இராததே இதற்கு முக்கியக் காரணமாகும். இயற்கையை நேசித்து, அவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று மேல் நாட்டில் தோன்றிய பல அறிஞர்கள் போதித்து அம்மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். சான்றாக எமர்சன் (Ralph Waldo Emerson), தோரா (Henry David Thoreau), ப்ரோஸ்ட் (Robert Lee Frost), ரூஸ்வெல்ட் (Theodore Roosevelt), டார்வின் (Charles Darwin) போன்ற மேல் நாட்டு அறிஞர்களைக் கொள்ளலாம். இது போன்றதொரு இயற்கை ஆர்வலர்கள் ஒருவர்கூட நம் நாட்டில் தோன்றாதது பேரிழப்பாகும். இயற்கையைப் போற்றாவிட்டாலும் பரவாயில்லை, அவற்றை அழிக்காமல் நமது பின் வரும் தலைமுறைகளுக்குக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் இக்காலத் தமிழ்ச் சமுகத்திற்கு இல்லாதது மிகவும் வருந்துதற்குரியது. எனவே தான் இத்தலைமுறை சார்ந்தவர்கள் இயற்கையை நேசிக்காமல் அவற்றை அழிக்க முழு மூச்சுடன் முனைந்தனர். இதுவே இன்றைய சமூகத் துன்பங்கள் பலவற்றுக்குக் காரணமாய் அமைந்தது. இயற்கையைப் போற்றிப் பாதுகாக்காத எந்தச் சமுதாயமும் மீளா அழிவினை நிச்சயம் சந்திக்கும் என்பதற்கு நம் தமிழ்ச் சமுதாயம் இலக்காகிவிடக் கூடாது என்பதே இயற்கை ஆர்வலர்களின் இன்றைய கவலை தோய்ந்த பிராத்தனையாகும்.

பார்வை நூற்பட்டியல்:

[1] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), பெரும்பாணாற்றுப் படை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

[2] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), பொருநராற்றுப் படை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

[3] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), திருமுருகாற்றுப் படை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

[4] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007), சிறுபாணாற்றுப் படை, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

[5] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007),மலைபடு கடாம், சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

[6] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007),முல்லைப் பாட்டு, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

[7] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007),மதுரைக் காஞ்சி, சென்னை: நியூ சென்சூரி புக் ஹவுஸ் லிமிடெட்

© 2020, IRJTSR 

[8] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007),நெடுநல் வாடை, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்

[9] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007),குறிஞ்சிப் பாட்டு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்

[10] பரிமணம்.அ.மா.&பாலசுப்பிரமணியன்.கு.வெ.(பதி),(2007),பட்டினப் பாலை சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட்

[11] தமிழ் நாட்டு வரலாறு-சங்க காலம், (1983), சென்னை: தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம்

[12] பிள்ளை.கே.கே.(2013), தமிழக வரலாறு - மக்களும் பண்பாடு, சென்னை: உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்

[13] Swaminathan.A, (1991), Social and Cultural History of Tamil Nadu, Chennai: Deepa Publications.